**முக்கியமான நாட்கள்**

**ஜூலை 12 - சர்வதேச மலலா தினம்**

- ஒவ்வொரு ஜூலை 12ம் தேதியும் "மலலா தினம்" என்று அழைக்கப்படும் ஐ.நா. அனுசரிப்பு ஆகும்.இந்த நாள் பெண்கள் கல்வி சமமாக அணுக வேண்டும் என்று வாதிட்ட பாகிஸ்தானின் மலாலா யூசுஃப்ஸாயின் வாழ்க்கை மற்றும் போராட்டங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது.

**தேசிய செய்திகள்**

**புது தில்லி**

**தாரோகர் பவன் திறப்பு விழா**

- புது தில்லியில் உள்ள திலக் மார்க்கில் இந்திய தொல்லியல் ஆய்வு மையம் (ASI) புதிய தலைமையகம் கட்டடம் - தாரோகர் பவனை பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்துவைத்தார்.

**பீகார்**

**பீகார் அரசு 2016 ஆம் ஆண்டு தடை மற்றும் மசோதா சட்டத்தின் கடுமையான விதிகளில் திருத்தங்களை அனுமதிக்கிறது**

- முதலமைச்சர் நிதீஷ் குமார் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டம், மதுபானங்கள் அருந்தினால் வீடு, நிலம் மற்றும் வாகனம் உட்பட சொத்துக்களை பறிமுதல் செய்யும் கடுமையான விதிகளை ரத்து செய்ய ஒப்புதல் அளித்தது.

**கேரளா**

**இந்திய இன்ஸ்டிடியூட் ஆப் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் மற்றும் கன்ஸ்ட்ரக்சன் (IIIC)**

- ஜூலை 23 ம் தேதி நாட்டிற்கான இந்திய இன்ஸ்டிடியூட் ஆப் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் அண்ட் கன்ஸ்ட்ரக்சனை (IIIC) முதலமைச்சர் பினராயி விஜயன் சவாராவில் திறந்து வைப்பார்.

**ஒடிசா**

**நிர்வாகிகளுக்காக பிரெய்ல்லில் சட்ட புத்தகங்கள்**

- முதல் முறையாக, ஒடிசாவில் பார்வை குறைபாடுள்ள நிர்வாக அதிகாரிகளுக்கு தேவைப்படும் அனைத்து சட்ட புத்தகங்களும் ப்ரெய்லி வடிவில் அச்சிடப்பட்டு வருகின்றன.

**சர்வதேச செய்திகள்**

**பிரேவ் கிட்ஸ் சர்வதேச விழா**

- யுனெஸ்கோவின் கீழ் உக்ரைன் மற்றும் போலந்தில் நடைபெற்ற பிரேவ் கிட்ஸ் சர்வதேச விழாவில் "குழந்தைகள் மற்றும் அவர்களது நண்பர்கள் சர்வதேச இயக்கத்தில்" இந்திய மாணவர்கள் நமது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

**புதிய நேட்டோ பயிற்சி கமேண்ட் மற்றும் ஈராக்கில் திறனை மேம்படுத்தும் பணியையும் கனடா ஏற்றுக்கொள்கிறது**

- ஈராக் பாதுகாப்பு படையினருக்கு பயிற்சி அளிப்பதற்கும் ஈராக் மிகவும் பயனுள்ள தேசிய பாதுகாப்பு கட்டமைப்பை உருவாக்குவதற்கும் பாக்தாத் பிராந்தியத்தில் கனடியத் துருப்புக்கள் நிறுத்தப்படும்.

**தரவரிசை & குறியீடு**

**உலக வங்கியின் 2017 தரவரிசையில் ஆறாவது மிகப்பெரிய பொருளாதாரமாக இந்தியா திகழ்கிறது**

**1) அமெரிக்க 2) சீனா 3) ஜப்பான் 4) ஜெர்மனி 5) இங்கிலாந்து 6) இந்தியா**

**மாநாடுகள்**

**MGNREGA மற்றும் முதல் அமைச்சர்களின் துணை குழுவின் முதல் கூட்டம்**

- MGNREGA மற்றும் வேளாண்மைக்கு இடையே ஒருங்கிணைப்பு தொடர்பாக முதல் அமைச்சர்களின் துணை குழுவின் முதல் கூட்டம் நிதி ஆயோக்கில் நடைபெற்றது.

**164 வது மத்திய பொதுப்பணித்துறை தினம்**

- புதுடில்லி விஞ்யான் பவனில் நடைபெற்ற 164 வது மத்திய பொதுப்பணித் துறை தினம் (CPWD) கொண்டாட்டத்தில் சுற்றுலா துறை அமைச்சர் உரையாற்றினார்.

**நியமனங்கள்**

- **டாக்டர் டி.சி.ஏ. ராகவன் -** டைரக்டர் ஜெனரல், முன்னாள் கவுன்சில் அலுவலக உறுப்பினர், உலக விவகாரங்களுக்கான இந்திய கவுன்சில் (ICWA).

**திட்டங்கள்**

**செப்டிக் டாங்க்களில் மனிதர் நுழைந்து சுத்தம் செய்வதை ஒழிக்க தொழில்நுட்ப சவாலை MoHUA தொடங்கியது**

- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் கழிவுநீர் சுத்திகரிப்புக்கு பொருத்தமான முறைகளை ஊக்குவிக்கவும் அதற்கான தீர்வுகளை அடையாளம் காண்பதற்கும் ஒரு தொழில்நுட்ப சவால் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் குறிக்கோள், செப்டிக் டாங்கிகள் மற்றும் பாதாளச் சாக்கடையினுள் மனித நுழைவை ஒழிப்பதாகும்.

**'ஒரு விவசாயி ஒரு மின்மாற்றி' திட்டம்**

- மின்சார இழப்பை குறைப்பதற்கு மகாராஷ்டிரா அரசாங்கம் "விவசாயிக்கு ஒரு மின்மாற்றி" ஒதுக்கீடு செய்வதற்கான புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தும்.

இரண்டு லட்சம் விவசாயிகளுக்கு உயர் மின்னழுத்த மின்சார இணைப்பு வழங்குவதன் மூலம் தடையின்றி மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யும்.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்(MoU),ஒப்பந்தங்கள் & மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

**இந்திய இராணுவம் மற்றும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா இடையே ஒப்பந்தம்**

- 2018 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் தேதி பாதுகாப்புபடை சம்பள தொகுப்புக்காக இந்திய இராணுவம் மற்றும் எஸ்.பி.ஐ. இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

**உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் "திருத்தப்பட்ட பயண ஏற்பாடுகளுக்கான" ஒப்பந்தத்தில் கையொப்பமிட இருக்கிறார்**

- அண்டை நாடுகளிலிருந்து வரும் குடிமக்களுக்கு விசா கட்டுப்பாடுகள் எளிதாக்க வேண்டி வங்கதேசத்துடன் இந்தியா ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட திட்டம்.

**பாதுகாப்பு செய்திகள்**

**இந்தியா, இந்தோனேசியா இண்டோ பசிபிக் ஒத்துழைப்பு பற்றி விவாதிக்கிறது**

•இந்தோனேசியா சமீபத்தில் இந்தியா கப்பல் அந்நாட்டு துறைமுகத்தை தனது செயல்பாட்டிற்காக அணுகுவதற்கு ஒப்புக்கொண்டது.

•முதன்முதலாக இந்திய கப்பல் INS சுமித்ரா மலாக்கா நீரிணைக்கு அருகே சபாங் துறைமுகத்தில் செயல்பட்டது.

**விருதுகள்**

**<u>ரயில் பவனில் அழகுபடுத்தல் போட்டி</u>**

1) பால்ஹர்ஷா & சந்திராபூர் (மத்திய ரயில்வே)
2) மதுபாணி (கிழக்கு மத்திய ரயில்வே) மற்றும் மதுரை (தெற்கு ரயில்வே)

3) காந்திதம் (மேற்கு ரயில்வே), கோட்டா (மேற்கு மத்திய இரயில்வே) மற்றும் செகன்ட்ராபாத் (தெற்கு மத்திய ரயில்வே)

## விளையாட்டு செய்திகள்

### FIFA உலக கோப்பை

- ஜூலை 15 ம் தேதி மாஸ்கோவில் நடைபெறும் FIFA உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் பிரான்ஸ் குரோஷியாவை எதிர்கொள்ளும்.
- முதல் அரையிறுதி - பிரான்ஸ் பெல்ஜியத்தை 1-0 எனத் தோற்கடித்தது
- 2 வது அரையிறுதி - குரோஷியா 2-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

### சர்வதேச தடகளத்தில் சரித்திர சாதனை படைத்தார் ஹிமா தாஸ்

- பின்லாந்தில் நடைபெறும் 20 வயதுக்குட்பட்டோருக்கான சர்வதேச தடகளப் போட்டியில் 400 மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்று, ஒரு சரித்திர சாதனையைப் படைத்திருக்கிறார் அஸ்ஸாமைச் சேர்ந்த ஹிமாதாஸ்.